
பக்கங்கள்:-20

# காலை முரசு



## தேவையேற்படின் நாடாளுமன்றம் வருவார் ரணில்

**ஐ.தே.க. அறிவிப்பு**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தேவைப்பட்டால் சரியான நேரத்தில் 07

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 25 | செவ்வாய்க்கிழமை | 09.09.2025 | அதிர்வு 039




# பொறுப்புக்கூறல், நீதி வழங்கல் கடமையில் இருந்து இலங்கை ஒருபோதும் விலகவே முடியாது!

**ஜெனிவாவில் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் இடித்துரைப்பு**

**"நீதி மற்றும் பொறுப்புக்கூறல் குறித் து இலங்கை அரசு தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இவையே, எதிர்கால குணப்படுத்தல் - நல்லிணக்கம் - நிலையான அமைதியை வளர்ப்பதற்கு அவசியமானவை."**

**- இவ்வாறு ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தெரிவித்தார்.** 06

# உள்நாட்டுப் பொறிமுறை மூலம் அனைத்தையும் அடைய முடியும்



## சர்வதேச தலையீடு வேண்டாம் என்று ஜெனிவாவில் இலங்கை வலியுறுத்து

"இலங்கையின் இறையாண்மைக்கு முக்கியத்துவம் அளிக்கின்றோம். சர்வதேச தலையீடுகளை நிராகரிக்கின்றோம். உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை அடைய முடியும் என நம்புகின்றோம்."

– இவ்வாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

"வெளித் தலையீடுகள் அதன் உள்நாட்டு நீதி மற்றும் நல்லிணக்க முயற்சிகளுக்குத் தடையாக இருக்கும். இலங்கை மக்கள் ஒரு 06




செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் இப்போது நீதிமன்றின் நேரடி கண்காணிப்பில் முன்னெடுக்கப்படுகின்றது. அதனால் இந்த விடயம் நீதிமன்றம் சம்பந்தப்பட்டது. நீதிமன்றத்தில் இருக்கின்ற ஒரு விவகாரம் குறித்து கருத்து வெளியிடுகின்ற போது சற்றுக் கவனமாக இருக்க வேண்டும். அதனால் இவ்விடயத்தை இன்று மேலோட்டமாகத் தொட்டுச் செல்ல விரும்புகிறேன்.

செம்மணி மனிதப் புதைக்குழி அகழ்வு பணி, நீதி அமைச்சினால் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாத நிலையில் நிறுத்தப்பட்டிருப்பதாக சட்டத்தரணிகள் வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. அடுத்த கட்ட அகழ்வுப் பணிக்கான நிதி ஒதுக்கீடு குறித்து நீதி அமைச்சிடமிருந்து அடுத்த ஒதுக்கீடு பற்றிய தகவல் கிடைத்த பின்னரே மீண்டும் இந்த அகழ்வுப் பணியை ஆரம்பிப்பது குறித்து நீதிமன்றம் தீர்மானிக்கும் எனத் தெரிகிறது.

இந்த மனிதப் புதைகுழி அகழ்வுக்கு முழு ஒத்துழைப்பு அரசு வழங்கும் என்று அரசுத் 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# நீர்நிலைகளில் இருந்து மூன்று சடலங்கள் மீட்பு!

இலங்கையில் வெவ்வேறு இடங்களில் நீர்நிலைகளில் இருந்து மூன்று ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

அம்பாந்தோட்டை மாவட்டம், அம்பலாந்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆறு ஒன்றில் மிதந்த நிலையில் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை, ஒக்வெலை பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கண்டி மாவட்டம், பல்லேகெலே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விக்டோரியா நீர்த்தேக்கத்தில் மிதந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கண்டி, குன்னேபான பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 68 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குருநாகல் மாவட்டம், கும்புக்கெடே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெட்டிகம பிரதேசத்தில் கிம்புல்வான ஆற்றில் மிதந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கும்புக்கெடே , ஹெட்டிகம பிரதேசத்தைச் சேர்ந்த 80 வயதுடைய வயோதிபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி மூவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தார்களா அல்லது வேறு ஏதும் காரணங்கள் உள்ளனவா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாணந்துறை நிலங்கவின் சகாவுக்கு ஏழு நாள்கள் பொலிஸ் தடுப்புக் காவல்

பாணந்துறை நிலங்கவின் சகாவைப் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட பாணந்துறை நிலங்கவின் சகாவை 7 நாள்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க பாணந்துறை பிரதான நீதிவான் சம்பிக்க ராஜபக்ஷ, களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு நேற்று திங்கட்கிழமை அனுமதி வழங்கியுள்ளார்.

எம்பிலிப்பிட்டி சுரங்க என்று அழைக்கப்படும் அமித் குமார என்பவரே இவ்வாறு 7 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

பாணந்துறை நிலங்கவின் சகாவான எம்பிலிப்பிட்டி சுரங்க பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்து களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார்.



அவர் பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தோனேசியாவில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் இந்தோனேசியா பொலிஸாரால் 7 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கெஹெல்பத்தார பத்மே, கொமாண்டோ சலிந்த மற்றும் பாணந்துறை நிலங்க உள்ளிட்ட 6 பேர் அடங்கிய பாதாள உலகக் கும்பல் கடந்த மாதம் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பாதாள உலகக் குழுவினர் கடந்த மாதம் 31 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதையடுத்துப் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் செப். 22 முதல் 24 வரை விசேட டெங்குக் கட்டுப்பாட்டுத் தினங்கள்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு




(எஸ்.நிதர்ஷன்)

**"யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இம்மாதம் 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையிலான மூன்று தினங்களும் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுத் தினங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன."**

**- இவ்வாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தில் 937 டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் காரணமாக எந்தவொரு இறப்பும் பதிவு செய்யப்படவில்லை.

எனினும், யாழ். மாவட்டத்தில் பருவ மழைக்காலம் ஆரம்பிக்கவிருப்பதால் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டியுள்ளது.

டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மாவட்ட மட்டத்தில் ஒருங்கிணைக்கும் நோக்குடன் கடந்த செப்டெம்பர் 4ஆம் திகதி மாவட்ட டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இதன் அடுத்த கட்டமாக பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்களும், கிராம சேவையாளர் தலைமையில் கிராம மட்ட டெங்குக் கட்டுப்பாட்டு குழுக் கூட்டங்களும் செப்டெம்பர் 8ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் நடைபெறும்.

பொதுமக்கள் மத்தியில் டெங்குக் கட்டுப்பாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு நிறுவனங்களிலும் டெங்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் செப்டெம்பர் 14ஆம் திகதி சகல வணக்கத்தலங்களிலும், 15ஆம் திகதி சகல அரச நிறுவனங்களிலும், 16, 17ஆம் திகதிகளில் சகல பாடசாலைகளிலும் டெங்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து, யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் செப்டெம்பர் 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையிலான மூன்று தினங்களும் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுத் தினங்களாகப் பிரகடனப்படுத்தப்படுகின்றன.

இந்தக் காலப்பகுதியில் சகல வீடுகளிலும் வேலைத்தலங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் வர்த்தக நிலையங்களிலும் பொது இடங்களிலும் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழிக்கும் சிரமதானப் பணி ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இக்காலப் பகுதியில் சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஏற்பாட்டில் மேற்பார்வைக் குழுக்கள் வீடுகளையும் வேலைத்தளங்களையும் கல்வி நிறுவனங்களையும் வர்த்தக நிலையங்களையும் பார்வையிடுவர்.

இந்தக் குழுக்களில் சுகாதாரத் திணைக்கள, பிரதேச செயலக, உள்ளூராட்சி மன்ற மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பங்குபற்றுவர்.

எனவே, யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரையும் வேண்டுகின்றேன்." - என்றுள்ளது.




# இலங்கைக்கு கடந்த ஏழு நாள்களில் மாத்திரம் 37 ஆயிரத்து 495 சுற்றுலாப் பயணிகள் வருகை

இந்த வருடத்தில் செப்டெம்பர் மாதத்தின் முதல் 7 நாள்களில் 37 ஆயிரத்து 495 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை நேற்று தெரிவித்துள்ளது.

செப்டெம்பர் மாதத்தின் முதல் 7 நாட்களில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிள் இருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 171 ஆகும்.

அத்துடன், ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகளின் இருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அதன்படி, இந்த வருடம் (2025) ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 16 இலட்சத்து 4 ஆயிரத்து 18 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

# மதுபோதையில் அட்டகாசம் புரிந்த மருமகனை பொல்லால் தாக்கிக் கொலை செய்த மாமனார்!

மாமனாரால் பொல்லால் தாக்கப்பட்டு மருமகன் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் காலி, கரந்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தல்கஹவத்த பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மொரகொட பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய மருமகனே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,




சம்பவ தினத்தன்று கொலை செய்யப்பட்ட மருமகன் தனது வீட்டில் நண்பர்களுடன் இணைந்து மதுபானம் அருந்தியுள்ள நிலையில் மதுபோதையில் உள்ள நண்பர்களை அவர்களது வீடுகளுக்குக் கொண்டு சென்று விடுவதற்காக மாமனாரிடம் ஓட்டோவைக் கேட்டுள்ளார். ஆனால், மாமனார் தனது ஓட்டோவைக் கொடுக்க மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதனால் கோபமடைந்த மருமகன் பொல்லால் வீட்டின் கதவை அடித்து உடைத்து மனைவியைத் தாக்க முயன்றுள்ளார்.

அதைத் தடுப்பதற்காக மாமனார் தனது மருமகனைப் பொல்லால் தாக்கியுள்ளார்.

காயமடைந்த மருமகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து சந்தேகநபரான 58 வயதுடைய மாமனார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரந்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை!

குடும்பஸ்தர் ஒருவர் வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் களுத்துறை, ஹொரணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெபெல்லகொட பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

ஹொரணை , கெபெல்லகொட பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 66 வயதுடைய நபரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவர் தனது அயல் வீட்டுக்குச் சென்று அங்கு வசிக்கும் நபருடன் இணைந்து மதுபானம் அருந்திக் கொண்டிருந்துள்ளார்.



இதன்போது இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு எல்லை மீறியதால் இந்த வாள்வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான அயல் வீட்டில் வசிக்கும் நபரைப் பொலிஸார் கைது செய் துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் ஹொரணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# குடும்பச் சண்டையால் குழந்தையுடன் கொள்ளுப்பிட்டிக் கடலில் குதித்த தாய்

## குழந்தை மாயம்; தாய் உயிருடன் மீட்பு

கொழும்பு, கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள கடற்கரைப் பகுதியில் தாய் ஒருவர் தனது ஒரு வயது குழந்தையுடன் கடலில் குதித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடலில் குதித்த தாய் உயிருடன் மீட்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வயது குழந்தை கடலில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போயுள்ளார் என்று கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.



இந்தத் தாய் குடும்பத் தகராறு காரணமாக தனது கணவனுடன் முரண்பட்டு நுவரெலியா, வெலிமடை பிரதேசத்தில் இருந்து கொழும்புக்குச் சென்றுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தத் தாயின் கணவன் நுவரெலியாவில் பொலிஸ் நிலையம் ஒன்றில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# வவுனியாவில் இலவச கண் பரிசோதனை

(கி.வசந்தன்)

வவுனியாவில் இடம்பெற்ற இலவச கண் பரிசோதனையில் 350 பேர் கலந்து கொண்டு பரிசோதனை மேற்கொண்டனர்.

பிரித்தானியாவில் உள்ள புனர் வாழ்வும் புதுவாழ்வும் அமைப்பின் நிதி உதவியில், யாழ் போதானா வைத்தியசாலையின் கண் பிரிவுடன் இணைந்து வவுனியா விபுலானந்தா கல்லூரியின் 2005 ஆம் ஆண்டு க.பொ.த சாதரண தரம் கற்ற பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் இக்கண் பரிசோதனை கல்லூரியில் இடம்பெற்றது.

பிரித்தானியாவில் வசிக்கும் வைத்தியர் வேலாயுதம் சர்வேஸ்வரனின் தலைமையில் கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது 350 பேர் வரையில் கலந்து கொண்டு கண் பரிசோதனை மேற்கொண்டனர். அதில் 53 பேருக்கு கண்புரை அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டியமை கண்டு பிடிக்கப்பட்டது. அவர்களை யாழ் போதான வைத்தியசாலைக்கு பஸ்ஸில் அழைத்துச் சென்று இலவசமாகக் கண்புரை அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வாசித்தலுக்கான கண்ணாடிகள் 82 பேருக்கு இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.மேலும் 175 கண்ணாடிகள் இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.


















## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தரப்பில் பிரசாரம் செய்யப்படுகின்ற காரணத்தினால் அகழ்வுப் பணிக்கான நிதி ஒதுக்கீட்டை நீதி அமைச்சு செய்யாமல் இழுத்தடிக்க முடியாது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

எது, எப்படியாயினும் மழைக்காலம் விரைவில் தொடங்க இருக்கின்றது. அது தொடங்கினால் அகழும் பணி முற்றாகத் தடைப்படும். அதுவும் இப்போது செம்மணி புதைகுழி பகுதி பல இடங்களிலும் தோண்டப்பட்டு தண்ணீர் தேங்கக் கூடிய நிலைமை காணப்படுவதால், மழைப் பருவ காலம் தொடங்கினால் அது முடிந்து நிலம் காயும் வரை மீள அகழ்வு பணியைத் தொடங்க முடியாது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அதுவும் செம்மணி போல மழைக் காலத்தில் நீரோட்டம் தேங்கி நிற்கும் பகுதியில் அகழ்வு நடவடிக்கை சாத்தியமே இல்லை.

ஆக, மழை காலம் இப்போது ஆரம்பமாகுமானால் புதைகுழி தோண்டிய பகுதிகளில் நீர் தேங்கத் தொடங்கினால் மீண்டும் மழை காலம் முடியும் வரை – அடுத்த வருட முற்பகுதி வரை – காத்திருக்க வேண்டி வரும்.

அதுவரையில் செம்மணி மனிதப் புகைகுழி விவகாரம் ஒத்திப்போடப்பட்டு, ஆறிய கஞ்சி பழங்கஞ்சியான கதை ஆகிவிடும் வாய்ப்புகள் உண்டு.

செம்மணி மனிதப் புதைகுழி ஆய்வு இடைநிறுத்தப்படாமல், விரைவில் தொடர்வதுதான் நல்லது. இல்லையேல் விவகாரம் அடுத்த வருடம் நடுப் பகுதி வரை தள்ளி போகும் ஆபத்து உண்டு.

## பொறுப்புக்கூறல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“பல தசாப்தங்களாக ஆதிக்கம் செலுத்தி வந்த வன்முறை மற்றும் தண்டனையின்மை சுழற்சிகளில் இருந்து மீள்வதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை இலங்கை தற்போது பெற்றுள்ளது. இதனைத் தவறவிடக்கூடாது.” – என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நேற்று ஆரம்பமானது. இதில் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கை தொடர்பாக அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே மேற்படி விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“அண்மையில் நான் இலங்கைக்குச் சென்றபோது, நாட்டின் மிக நீண்டகால பிரச்சினைகளுக்கு, புதிய திசை நோக்கிய பயணத்துக்கு, அந்த நாட்டின் தலைமை உறுதியளித்தது. இந்த நிலையில், புதிய அணுகுமுறை, ஒத்திசைவானதும் காலக்கெடுவை வழங்கக்கூடியதாகவும் அமைய வேண்டும்.

பொறுப்புக்கூறல், நீதியை வழங்குதல், நீண்ட காலமாக இலங்கை மக்கள் அனுபவித்துவரும் அரசியல் ரீதியான பாகுபாடுகள் மற்றும் பிரிவினையை நீக்குதல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இலங்கை அரசு, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் குறித்து தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இவையே,எதிர்கால குணப்படுத்துதல், நல்லிணக்கம் மற்றும் நிலையான அமைதியை வளர்ப்பதற்கு அவசியமானவை.

இலங்கை பயணத்தின்போது, மனித உரிமைகள் மீறல், துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டவர்களின் தொடர்ச்சியான துன்பங்களை நான் நேரடியாக கண்டேன்.

செம்மணி மனிதப் புதைகுழியில், தனது அன்பானவரின் இழப்பைத் தாங்கிக்கொள்ளாத துக்கத்தில் இருக்கும் ஒரு குடும்பத்தை நான் சந்தித்தேன்.

தென் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணும் 30 ஆண்டுகளுக்குப் பிறகும் தனது கணவரைத் தேடி வருகின்றார் என்றும் என்னிடம் கூறினார்.

தண்டனையில் இருந்து விலக்கு என்பது, இரண்டாவது வன்முறை வடிவமாகும். இது தீங்கு சுழற்சிகளை நிலைநிறுத்துகின்றது. இந்தநிலையில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் கவனிக்கப்பட வேண்டும். அவர்களின் குரல்கள் பொறுப்புக்கூறல், உண்மை, நீதி மற்றும் இழப்பீடு குறித்த அரசின் கொள்கைகளை வழிநடத்த வேண்டும்.

உள்நாட்டுப் போரின்போது மனித உரிமைகள் மீறல் உள்ளிட்ட மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களை முறையாக ஒப்புக்கொள்ள வேண்டும். அரசு மற்றும் அதன் படைகள் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். அவர்கள் செய்த உரிமைகள் மீறல், குற்றங்களின் நீடித்த தாக்கத்தை அங்கீகரிக்க வேண்டும்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளைப் போன்ற அரசு சாராத ஆயுதக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் தொடர்பிலும் உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். இதுவே, பொதுவான நீதி வழங்கப்படுகின்றது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும்.

இலங்கை அரசு விரிவான அரசமைப்பு, சட்ட மற்றும் நிறுவன சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய அவசர தேவை உள்ளது. கடந்த கால துயரங்கள் மீண்டும் ஒருபோதும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு இது மிகவும் முக்கியமானது.

சுயாதீன அங்கத்தவர்களைக் கொண்ட, சுயாதீன பொது வழக்கு தொடுநர் பணிமனை ஒன்றை அமைப்பதற்கான இலங்கை அரசின் முயற்சியை வரவேற்கின்றோம்.

பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் குடியுரிமை தொடர்பான நாடாளுமன்ற சீர்திருத்தத்தை நாம் தீவிரமாக ஊக்குவிக்கின்றோம்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்வதற்கான அரசின் உறுதிப்பாடு இருந்த போதிலும், இந்தச் சட்டத்தின் கீழ் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுப்புக்காவல்களுக்கு உடனடி தடை விதிக்க வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலும், பொறுப்புக்கூறல் தொடர்பிலும், காணி விவகாரங்கள் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பிலும் பணியாற்றுபவர்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

இதேவேளை, வடக்கு, கிழக்கின் இராணுவ மயமாக்கல், காணிகளை திருப்பியளித்தல் மற்றும் அனைத்து மட்ட ஆட்சிக்கும் அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட விரிவான பாதுகாப்புத்துறை சீர்திருத்தத்துக்கான அவசர தேவை உள்ளது.” – என்றார்.

## உள்நாட்டுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நியாயமான, சமமான மற்றும் வளமான சமுதாயத்தை உருவாக்க விரும்புகின்றார்கள். வெளிப்புற நடவடிக்கைகள் பிரிவினையை மட்டுமே ஏற்படுத்தும்.” – என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடரில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை குறித்த அறிக்கை தொடர்பாக இலங்கை அரசு சார்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நேற்று உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை அரசு கடந்த 11 மாதங்களில் அடைந்துள்ள முன்னேற்றங்கள், எதிர்காலத் திட்டங்கள் மற்றும் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் ஊழல் ஒழிப்புக்கான உறுதிப்பாடுகள் குறித்து இந்த உரையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

அதில்,

**அரசியல் மற்றும் ஆட்சிமுறை மாற்றங்கள்**

+ 2024 செப்டம்பர் ஜனாதிபதித் தேர்தலிலும், அதைத் தொடர்ந்து நவம்பர் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி கட்சிக்கு மக்கள் அமோக ஆதரவை வழங்கினர்.
+ வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள மக்கள் ஒரு கட்சிக்கு இவ்வளவு ஆதரவு வழங்கியது இலங்கையின் வரலாற்றில் இதுவே முதல் முறை.
+ பல்வேறு சமூகத்தினரையும், சாதனை படைத்த எண்ணிக்கையிலான பெண்களையும் உள்ளடக்கிய இலங்கையின் வரலாற்றிலேயே மிகச் சிறந்த நாடாளுமன்றம் இது. முதன்முறையாக, மலையக சமூகத்தைச் சேர்ந்த இரண்டு பெண் உறுப்பினர்களும், ஒரு கண்பார்வையற்ற மாற்றுத்திறனாளியும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.
+ பல ஆண்டுகளாக ஒத்திவைக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. எந்தவித வன்முறைச் சம்பவங்களும், அரச வளங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்ட நிகழ்வுகளும் இல்லாமல் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெற்றன.

**பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றங்கள்**

+ அரசு பொறுப்பேற்றபோது நாடு எதிர்கொண்டிருந்த பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முன்னுரிமை அளித்து, சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்கள் மூலம் பொருளாதார சவால்கள் குறைக்கப்பட்டன.
+ விவசாயம், மீன்பிடி உள்ளிட்ட பாதிக்கப்படக்கூடிய துறைகளுக்கு சிறப்பு நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளுக்கு வரலாற்றுபூர்வமான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

+ வறுமையில் வாடுவோர், பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் போன்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதற்காக சமூக நலன்புரி நிதி அதிகரிக்கப்பட்டது.
+ மீள்குடியேற்ற தேவைகளைப் பூர்த்தி செய்யவும், வீட்டுத் திட்டங்களை விரைவுபடுத்தவும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவும் ரூ. 1500 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள்**

+ பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்குப் பதிலாக புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை உருவாக்குவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. 07



# பஸ் சாரதியின் அலட்சியமே எல்ல விபத்துக்கு காரணம்

## சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

எல்ல–வெல்லவாய வீதியில் நடந்த பஸ் விபத்து, பஸ் சாரதியின் அலட்சியத்தால் ஏற்பட்டதாக போக்குவரத்து நிர்வாகம் மற்றும் வீதி பாதுகாப்புக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக ஹபுகொட தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும்போது இதனை குறிப்பிட்ட அவர், விசாரணையில், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் வீதியை விட்டு விலகி பள்ளத்தாக்கில் வீழ்ந்துள்ளமை தெரியவந்ததாக கூறினார்.

கடந்த 4 ஆம் திகதி இரவு, தங்காலை நகர சபை ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை ஏற்றிச் சென்ற பஸ், சுற்றுலா சென்று திரும்பியபோது, எல்ல-வெல்லவாய பிரதான வீதியில் 24 ஆவது மைல்கல்லில் உள்ள பள்ளத்தாக்கில் வீழ்ந்ததில் இந்த விபத்து நேர்ந்தது.

இந்த விபத்தில் 15 பேர் உயிரிழந்ததுடன், மேலும் 17 பேர் காயமடைந்தனர்.

இந்தநிலையில் பதுளை மற்றும் பண்டாரவளைக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில், மோட்டார் வாகன பரிசோதகர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட பொலிஸ் குழுவினால் விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக ஹபுகொட தெரிவித்தார்.

## உள்நாட்டுப்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த சட்டமூலம் இந்த மாதமே வர்த்தமானியில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

+ இணையவழி பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

+ காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் போன்ற உள்நாட்டு நல்லிணக்க பொறிமுறைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

+ காணாமல்போனோர் தொடர்பான விசாரணைகளை விரைவுபடுத்த காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்திற்கு ரூ. 375 மில்லியன் மேலதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

+ உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

+ செம்மணி மனிதப் புதைகுழி உட்பட பல்வேறு புதைகுழிகள் குறித்து சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

+ பொலிஸ் துறையின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டு, ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் போன்ற பல நீண்டகால வழக்குகள் மீண்டும் விசாரிக்கப்படுகின்றன.

+ பெரும்பாலான தனியார் காணிகள் உரிமையாளர்களிடம் விடுவிக்கப்பட்டுள்ளன. தேசிய பாதுகாப்புக்கு அத்தியாவசியமான காணிகள் மட்டுமே அரசு கட்டுப்பாட்டில் வைக்கப்படும், அதற்கான உரிய இழப்பீடு வழங்கப்படும்.

+ மோதல்களில் உயிரிழந்தோரை நினைவுகூரும் உரிமைக்கு அரசு அனுமதி அளித்துள்ளது, இதனால் இந்த ஆண்டு பல இடங்களில் நினைவு நிகழ்வுகள் சுதந்திரமாக நடத்தப்பட்டன.

+ சிவில் சமூக அமைப்புகளுக்கு சுதந்திரமாக செயற்பட ஏற்ற சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

**ஊழல் ஒழிப்பு மற்றும் சீர்திருத்தங்கள்**

+ கடந்த சில மாதங்களில், ஊழல் ஒழிப்புக்கு வலுவான புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. சமூக நிலை எதுவாக இருந்தாலும், அரசியல் தலையீடு இல்லாமல், குற்றச்சாட்டுகள் குறித்த சுதந்திரமான விசாரணைகள் மற்றும் வழக்குகள் தொடரப்பட்டு பல முக்கிய தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

+ இந்த ஆண்டின் தொடக்கத்தில், புதிய அரசியல் கலாசாரம் மற்றும் நெறிமுறை சார்ந்த நல்லாட்சியை ஊக்குவிக்கும் நோக்கில் "தூய இலங்கை" என்ற நிகழ்ச்சித்திட்டம் ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்டது.

+ ஊழலற்ற இலங்கை ஒவ்வொரு குடிமகனின் கண்ணியத்துக்கும், நலனுக்கும் இன்றியமையாதது என அரசு உறுதியாக நம்புகின்றது.

அத்துடன் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உறுப்பினர்கள், பார்வையாளர்கள் மற்றும் அனைத்து பங்குதாரர்களும் இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றும், அதன் முயற்சிகளைப் புரிந்து கொண்டு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் இலங்கை கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றங்களைப் பயன்படுத்திக்கொண்டு, உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் அனைத்து இலங்கை மக்களின் உரிமைகளையும் மேம்படுத்த வேண்டும் என்று அரசு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் இறையாண்மைக்கு முக்கியத்துவம் அளிப்பதையும், வெளிநாட்டுத் தலையீடுகளை நிராகரிப்பதையும், உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை அடைய முடியும் என இலங்கை நம்புகின்றது.

– மேற்குறிப்பிடப்பட்ட முக்கிய விடயங்கள் விஜித் ஹேரத் தனது உரையில் தெரிவித்தார்.

## தேவையேற்படின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்துக்குள் நுழைவார் என்று அந்தக் கட்சியின் முக்கியஸ்தரான ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"கட்சி உறுப்பினர்களிடம் இருந்து ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்குள் செல்வது குறித்து பரிசீலிக்க வேண்டும் என அழைப்புகள் வந்துள்ளன. ஆனால், தற்போது அவ்வாறு செய்யும் எண்ணம் அவருக்கு இல்லை.

ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றத்துக்குள் நுழையுமாறு மற்ற அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத்த மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் இதில் அடங்குகின்றனர்." – என்றார்.

ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்கு வந்தால் நல்லது என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# நாம் அரசியல் சார்பு கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளோம்

## பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

அரசாங்கம் தற்போது அரசியல் சார்பு கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 704 ஊழியர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

“தற்போது வழங்கப்படும் அனைத்து நியமனங்களும் கட்சி அல்லது இனத்தை விட சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். கடந்த அரசாங்கங்கள் அரச நிறுவனங்களை அரசியல்மயமாக்கி, அரசியல் ஆட்சேர்ப்பு மூலம் அரச நிதியை வீணடித்தன.

கடந்த வருடம் செப்டம்பர் 21 ஆம் திகதி மக்கள் அளித்த ஆணை நாட்டை ஒரு புதிய பாதையில் பயணிக்க செய்துள்ளது.

ஊழல் நிறைந்த சகாப்தம் முடிவுக்கு வந்துள்ளதுடன் சமத்துவம் மற்றும் பொறுப்புக்கூறலுக்கு உறுதியளித்துள்ள அரசாங்கம் உருவாகியுள்ளது.

அத்துடன், அரசாங்கம் தொழில் பாதுகாப்பை உறுதி செய்யும். குடிமக்கள் நாட்டின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து கூட்டு முன்னேற்றத்துக்கு பங்களிக்க வேண்டும்” என்றார்.



# 2025 இலங்கை பொருளாதார உச்சி மாநாடு சுற்றுலாத்துறை தொடர்பில் விசேட கவனம்

2025 ஆம் ஆண்டுக்கான இலங்கை பொருளாதார மற்றும் முதலீட்டு உச்சி மாநாட்டின் முதலாவது தினத்தில், நாட்டின் சுற்றுலாத்துறை குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளதாக இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கை சுற்றுலாத் துறையில் அதிக ஆற்றலை எவ்வாறு மேம்படுத்த முடியும் என்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை எவ்வாறு உலகளவில் போட்டித்தன்மை வாய்ந்த சுற்றுலாத் துறையினை உருவாக்க முடியும் என்பது குறித்தும் இதன்போது ஆராயப்படவுள்ளது.

“வளர்ச்சிக்கான நுழைவாயில் – ஆசியாவின் வளர்ந்து வரும் வாய்ப்பு“ எனும் தொனிப்பொருளில் இந்த உச்சி மாநாடு எதிர்வரும் டிசம்பர் மாதம் 2 மற்றும் 3 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நாட்டுக்கு நிழல் ஜனாதிபதி!

“அமைச்சரவைத் தீர்மானங்கள் அமைச்சரவைக் கூட்டங்களிலேயே எடுக்கப்பட வேண்டுமே தவிர, பெலவத்தையில் அல்ல. நாட்டின் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவே அன்றி ரில்வின் சில்வா அல்லர்.”

- இவ்வாறு அண்மையில் கூறியிருந்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

பெலவத்தையில் தான் ஜே.வி.பி. கட்சியின் தலைமையகம் இயங்குகிறது. அங்கிருந்துதான் அக்கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா இயங்குகிறார். பல சமயங்களில் அரசாங்கத்தின் முடிவை - ஜனாதிபதியின் தீர்மானங்களை - தாம் எடுப்பவர் போல அவர் அறிவிக்கின்றார்.

நாட்டின் நிறைவேற்று அதிகாரம் - இறைமை - மக்களின் நேரடி வாக்களிப்பு மூலம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதை அவர் பாரதீனப்படுத்த முடியாது.

ஆனால் பல சமயங்களிலும் தாமே நிறைவேற்று அதிகாரப் பதவியை வைத்திருக்கின்றவர் போல ரில்வின் சில்வாவின் அறிவிப்புக்கள் வெளிவருகின்றன. அதனைத்தான் சுமந்திரன் ‘அமைச்சரவைத் தீர்மானங்கள் அமைச்சரவைக் கூட்டத்திலேயே எடுக்கப்பட வேண்டுமே தவிர, பெலவத்தையில் அல்ல’ என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ரில்வின் சில்வா அரசாங்கத்தின் ஓர் அங்கத்தவரல்லர். குறைந்தபட்சம் அரசுத் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினரோ அல்லது அமைச்சரோ அல்லர்.

ஆட்சியை அமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தி கட்சியின் செயலாளர் கூட அவர் அல்லர். தேசிய மக்கள் சக்தியின் கூட்டில் அங்கத்துவம் பெறும் ஒரு கட்சியின் செயலாளர் மட்டுமே அவர்.

ஆனால் நாட்டின் அதிகாரம் அவர் கைகளில் இருப்பது போன்ற செயற்பாடுகள்தான் வெளியே தெரிகின்றன.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த ரில்வின் சில்வாவின் செயற்பாடு இங்கு அவர் ஒரு ‘நிழல் ஜனாதிபதி’ போன்ற படத்தைத் தருவதாகவே இருந்தது. அரசில் இடம்பெறாத - அதே நேரம் ஆட்சி அமைத்திருக்கும் கட்சியின் செயலாளராகக் கூட இல்லாத - ஒருவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள ஓர் அமைச்சர் கூட ‘கூசா’ தூக்குவதை யாழ்ப்பாணத்தில் காண முடிந்தது.

இது ஜனநாயகத்தைப் பொறுத்தவரை மிக மோசமான நிலைமை. மக்களினால் வாக்களிப்பு மூலம் அநுரகுமார திஸநாயக்கவுக்கு வழங்கப்பட்ட இறைமை இன்னொரு தரப்பினால் பிரயோகிக்கப்படக் கூடியமை போன்ற நிலைமை நிலவுவது மிகவும் ஆபத்தானது.

ஏதோ அரசாங்கத்தின் மூத்த தலைவர் போல - முக்கிய அதிகாரம் கொண்டவர் போல - போன இடமெல்லாம் ரில்வின் சில்வா செயற்படுகின்றார். போதாக்குறைக்கு கச்சதீவு பற்றியும் யாழில் வந்து பேசுகிறார்.

இந்தியாவில் இப்போது கச்சதீவுப் பிரச்சினையைத் திடீரெனத் தூக்கிப் பிடித்து இருப்பவர் நடிகர் விஜய். புதிய கட்சி ஒன்றின் தலைவர். அவர் ஒன்றும் இந்தியப் பிரதமரோ, அமைச்சரோ, தமிழ்நாட்டின் முதல்வரோ, தமிழ்நாட்டின் அமைச்சர் கூட இல்லை. அப்படி இருக்கையில், அவருக்குப் பதிலடி என்று நாட்டின் ஜனாதிபதியும் நிழல் ஜனாதிபதியும் எடுக்கும் நடவடிக்கைகள் இந்தியாவை - அதன் ஆட்சித் தலைமையை - சீண்டும் ஒரு எத்தனம்தான்.

நிழல் ஜனாதிபதியும் அவரின் அதிகார ஆரவாரமும் நாட்டின் ஜனநாயகத்திற்கு நல்லதல்ல. விளைவுகள் விபரீதமாகலாம்.




# வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கு பிரதமர் நரேந்திர மோடிதான் காரணம்

## தமிழிசை கூறுகின்றார்

வெளிநாடுகளில் இருந்து முதலீடுகளை முதல்வர் ஈர்த்து வந்ததற்கு பிரதமர் மோடிதான் காரணம் என தமிழக பா.ஜ.க.முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்

"தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளிநாடுகளுக்கு எல்லாம் சென்று விட்டு இன்று தமிழகத்தில் கால் வைத்துள்ளார். முதலீடுகளை ஈர்த்து வந்திருக்கிறோம் என்று முதல்வர் சொல்லி இருக்கிறார். பிரதமர் மோடி வெளிநாடுகளுக்கு சென்று நமது பலத்தை அங்கு காண்பித்ததால்தான் நமது "டாடி"யால் முதலீடுகளை ஈர்க்க முடிகிறது. இதற்கு முன்னால் சென்றபோது எவ்வளவு முதலீடுகளை ஈர்த்தார்கள், தமிழகத்தில் எவ்வளவு முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பதற்கு ஒரு தெளிவான கணக்கு கிடையாது. எனவே, இது அவரது சாதனை அல்ல. இதற்கு முழு காரணம் பிரதமர் மோடிதான்.

தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு மிக மிக மோசமான நிலையில் இருக்கிறது. எதிர்க்கட்சியை சேர்ந்தவர்களை கைது செய்தால், அவமானப்படுத்தினால் நாம் பாராட்டப்படுவோம் என காவல் துறை அதிகாரிகள் நினைத்து செயல்படுகிறார்கள். எனவே, முதல்வர் ஸ்டாலின் தனது கையில் இருக்கும் காவல் துறையை சரியாக வழிநடத்த வேண்டும். காங்கிரஸை சேர்ந்தவர்கள் நேற்று தென்பகுதியில் ஒரு கூட்டம் போட்டிருக்கிறார்கள். கூட்டம் போடுவதற்காகவாவது தென்பகுதி அவர்களுக்கு நியாபகம் வந்திருக்கிறதே என்பதில் எனக்கு மகிழ்ச்சி.

ஓட்டு திருடுபவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று ப.சிதம்பரம் சொல்கிறார். ஆரம்ப காலத்தில் இருந்து கள்ள ஓட்டுக்கு மிகப் பிரம்மாண்டமான அங்கீகாரத்தை கொடுத்தது திமுகதான். கள்ள ஓட்டை கலாச்சாரமாகவே மாற்றிய திமுகவுடன் கூட்டணியில் இருந்துகொண்டு இவ்வாறு சிதம்பரம் பேசுகிறார்.

# தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் குறித்து இந்தியா – ஐரோப்பிய ஒன்றியம் பேச்சு



இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இடையே தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை ஆரம்பமாகியுள்ளது.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக சக்தியான இந்தியாவும், ஐரோப்பிய ஒன்றியம், நெருக்கமான உறவை கொண்டுள்ளன.

இந்தியா – ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான பேச்சுவார்த்தை, கடந்த 17 ஆண்டுகளாக இழுபறியாக இருந்து வந்தது.

ஒரு சில விவகாரங்களில் ஒருமித்த கருத்து ஏற்படாததை அடுத்து, 2013ல் இந்த பேச்சுவார்த்தை நிறுத்தப்பட்டது.

பின்னர், 2022 ஜூன் மாதம் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பமானது.

இந்த ஒப்பந்தத்தை விரைந்து முடிக்க இருதரப்பும் தீவிரம் காட்டி வருகின்ற நிலையில், கடந்த 4 ஆம் திகதி இந்திய பிரதமர் மோடியுடன் ஐரோப்பிய கவுன்சில் தலைவர் அன்டோனியோ கோஸ்டா, ஐரோப்பிய கமிஷனின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோருக்கிடையே நடந்த தொலைபேசி உரையாடலில் விவாதிக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த அடுத்த சுற்று பேச்சுவார்த்தை டில்லியில் நேற்று தொடங்கியது.



# மெக்சிகோவில் பஸ் மீது ரயில் மோதி விபத்துக்குள்ளானதில் 8 பேர் பலி

## 45 பேர் காயம்

மெக்சிகோவில் இரண்டு தட்டு பஸ்கள் ஒன்றின் மீது ரயில் மோதியதில் 8 பேர் பலியாகினர்.

மேலும், 45 பேர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மெக்சிகோவின் வடமேற்கே உள்ள அட்லகோமுல்கோ நகரில் நேற்று ரயில் கடவையில் சிக்கிய இரண்டு தட்டு பஸ் மீது ரயில் மோதி விபத்துக்குள்ளானது.

தகவல் அறிந்த அந்த நாட்டு பொலிஸார் மற்றும் மீட்புக் குழுவினர் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

ரயில் கடவை அருகே இரண்டு தட்டு பஸ் வந்த நிலையில், பஸ்ஸின் பிரேக் செயலிழந்ததன் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், 45 பேர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பிரான்ஸில் அரசு கவிழ்ந்தது; பதவி விலகினார் பிரதமர்



பிரான்ஸின் பிரதமர் பிராங்காய்ஸ் பெய்ரு தலைமையிலான அமைச்சரவை கவிழ்ந்தது.

9 மாதங்களுக்கு முன் பதவிக்கு வந்த பிராங்காய்ஸ் பெய்ரு அரசின் செலவுகளை சிக்கனமாக மேற்கொள்வது அவசியம் என்ற தன் நிலைப்பாட்டுக்கு ஆதரவு கோரி, நம்பிக்கை வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

பிரான்ஸ் நாடாளுமன்றில், நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் பிராங்காய்ஸ் பெய்ருக்கு எதிராக 364 எம்.பி.க்கள் வாக்களித்தனர், மேலும் 194 எம்.பி.க்கள் அவருக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இந்த நிலையில் பிரதமர் பதவியை பிராங்காய்ஸ் பெய்ரு இராஜினாமா செய்தார்.

முன்னதாக அரசியலில் எதிரும் புதிருமாக இருப்பவர்கள் கூட தனக்கு எதிராக கூட்டணி சேர்ந்து கொண்டு செயல்படுவதாக, பிரதமர் பிராங்காய்ஸ் பெய்ரு விரக்தியுடன் கருத்து தெரிவித்துள்ளார். இதன் மூலம் இதுவரை ஜனாதிபதி மக்ரோன் ஆட்சியில் 4 முறை பிரதமர்கள் இராஜினாமா செய்துள்ளனர்.

கடந்த டிசம்பரில் நம்பிக்கையில்லா பிரேரணை வாக்கெடுப்பில் தோல்வியடைந்த தனது முன்னோடி மைக்கேல் பார்னியரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, 9 மாதங்கள் மட்டுமே பதவியில் இருந்த பேய்ரூ இப்போது பதவி விலகி உள்ளார்.

பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் எதிர்வரும் நாள்களில் ஒரு புதிய பிரதமரை நியமிப்பார் என்று எலிசி அரண்மனை தெரிவித்துள்ளது.

# காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க செயலாளர் மீது தாக்குதல் நடத்திய விவகார வழக்கு ஒத்திவைப்பு

(கி.வசந்தன்)

தமிழர் தாயகக் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பியின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிரான வழக்கு வவுனியா நீதிமன்றத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட சங்க செயலாளர் கோ.ராஜ்குமார் மீது ஈ.பி.டி.பியின் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தலைமையிலான குழுவினர் கடந்த 2019 ஆம் ஆண்டு அவரை துரத்திச்



சென்று தாக்குதல் மேற்கொண்டு இருந்தனர் எனக் கூறப்படுகின்றது. ஆர்ப்பாட்டத்தின் போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மீது அவதூறு ஏற்படுத்தப்பட்டதால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த ராஜ்குமார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமையுடன் அது தொடாபான வழக்கு வவுனியா நீதிமன்றில் இடம்பெற்று வந்தது. நேற்று இந்த வழக்கு மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் இந்தியாவில் கடவுச் சீட்டு மோசடி வழக்கில் சிறையில் இருக்கின்றமையால் வழக்குத் தவணைக்கு சமுகமளிக்கவில்லை. இதனால் வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதிக்கு நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டது.



# கோண்டாவிலில் பெண்கள் உள்ளிட்டோர் தீ மிதிப்பு

கோண்டாவில் மேற்கில் ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள கந்தர்வளவு ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் கோவிலில் (காளி கோவில்) நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தீ மிதிப்பு நிகழ்வு பெண்கள் உள்ளிட்டோர் பங்கேற்புடன் சிறப்புற நடைபெற்றது.

இந்த கோவிலில் மஹோற்சவ உற்சவத்தில் வரும் தீர்த்தத் திருவிழாவில் தீ மிதிப்பு நிகழ்வு பன்னெடுங் காலமாக இடம்பெற்று வருகின்றது. பிள்ளையார், காளி அம்மன், முருகன் வள்ளி-தெய்வானை சமேதராய் தீர்த்தம் ஆடியதனைத் தொடர்ந்து உள் மற்றும் வெளி வீதி வலம் வந்த பின்னர் தீ மிதிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

மங்கல வாத்தியங்கள் முழங்க நூற்றுக்கணக்கான அடியவர்கள் பங்கேற்ற நிகழ்வில் பெண்கள் உள்ளிட்ட இளையோர் பலர் மழைக்கு மத்தியிலும் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்ற தீ மிதித்தனர்.

இந்த கோவிலின் மற்றொரு புதுமையாக அயல் மற்றும் உள்ளூர் கிராமங்களில் வாழ்ந்து வரும் அடியவர்கள், தான் தோன்றித் தாயவளான காளி அம்மனிடம் தமது வேண்டுதல்கள் நிறைவேறிய பின்னர், சித்திரை பௌர்ணமி அன்று அடியவர்கள் தயாரித்து வழங்கும் உணவு, மரக்கன்றுகள், நிறை நாழி மற்றும் புதிய பொருள்கள் போன்றவை பெரும் தொகை பணம் கொடுத்து ஏலம் எடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.











# ஆடல் வேள்வி இறுதி நாள் நிகழ்வு

அகில இலங்கை கம்பன் கழகம் மூன்று நாள்கள் நடத்திய 'நிருத்தோற்சவம்' – 2025 ஆடல் வேள்வி நிகழ்வில் மூன்றாம் நாள் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் கழகத்தின் பெரும் தலைவர்ஜெ. விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது. புரவலர் ஹாஷிம் உமர் தம்பதியினர் தம்பதியினர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும். அவர்களுக்கான பொன்னாடை கௌரவத்தை பெரும் தலைவர் வழங்குவதையும் நர்த்தன கலைமனி நுண்கலைக் கோயில் நடனப்பள்ளி ஆசிரியர் ஸ்ரீமதி லக்ஷ்மி ஸ்ரீகரனின் மாணவர்கள் 'கம்பனின் காவிய நாயகன்' என்ற தலைப்பில் வழங்கிய நடன நிகழ்வையும் கலந்து கொண்டோரையும் படங்களையும் காணலாம்.
























தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲



# ஆடல் வேள்வி இறுதி நாள் நிகழ்வு















# மட்டக்களப்பில் ஆசிரியர் நிரந்தர நியமனம் கோரி பட்டதாரிகள் நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பில் ஆசிரியர் நிரந்தர நியமனம் கோரி பாடசாலைகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றிவரும் பட்டதாரிகள், நேற்றுத் திங்கட்கிழமை காந்தி பூங்காவின் முன்னால் கவனவீர்ப்பு ஆர்ப்பாடத்தில் ஈடுபட்டனர்.

பட்டதாரிகளான அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக பாடசாலைகளில் இணைக்கப்பட்டு கடமையாற்றி வருபவர்களின் ஒன்றியமே இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இதனையடுத்து காந்தி பூங்காவில் முன்னாள் நேற்றுக் காலை 9.00 மணிக்கு ஒன்று திரண்ட நூற்றுக் கணக்கான பட்டதாரிகள் 'பட்டம் பெற்ற எங்களை ஏன் மட்டம் தட்டுகின்றீர்கள்?', 'போட்டிப் பரீட்சை மட்டும்தான் தகுதியா?', 'நாங்கள் கற்பித்து பெறுபேறு வரவில்லையா?', 'ஒரே பணி, ஒரே அங்கீகாரம், ஆசிரியர் வேண்டும்!', 'எங்கள் உழைப்பை மதியுங்கள்!', 'உரிமையை வழங்கு!', 'அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அல்ல – ஆசிரியரகவே அங்கீகரிக்கவும்!', 'எங்கள் விடயத்தில் இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதியை பெற்றுத்தருமா அரசு?', 'ஏங்களுக்கு ஆசிரியர் நிரந்தர நியமனத்தை வழங்குக!' எனப் பல சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வாறு சுமார் ஒரு மணித்தியாலயம் கவன வீர்ப்பு ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர்.



















# ஆசிரியப் பணிபுரிகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மன்னார் செயலகம் முன்னாலும் கவனவீர்ப்புப் போராட்டம்

**(வாஸ் கூஞ்ஞ)**

ஐந்து வருடங்களாக ஆசிரியர்களாகப் பணிபுரிந்து வருகிறோம், இருப்பினும் எங்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்கவில்லை, நாங்கள் பட்டதாரிகளாக இருந்தும் அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளோம் –என மன்னார் மாவட்ட ஆசிரிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக தங்கள் கைகளில் பதாதைகளை ஏந்தியவாறு அமைதி வழியான கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்த வேளையில், ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

இதன் போது அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

“கடந்த 2020 ஆம் ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக உள்வாங்கப்பட்டு பாடசாலைகளிலே நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையினைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்களாக இணைக்கப்பட்டோம்.

இந்நிலையில் 5 வருடங்களாக, இன்று வரை நாங்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என்ற நியமனத்திலேயே ஆசிரியர் பணியைச் செய்து கொண்டிருக்கிறோம் .

கடந்த அரசாங்கங்களினால் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு இன்று வரை நிரந்தர நியமனத்தை பெற்றுக் கொள்ளவில்லை.

நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு மாணவர்களுக்குக் கற்பிக்கிறோம். அவர்களைச் சிறந்த பெறுபேறுகளைப் பெறச் செய்கிறோம். அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என்ற அடிப்படையிலேயே நாங்கள் ஆசிரியர்களாகச் சகல கடமைகளையும் மேற்கொள்கிறோம்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தைக் கற்றுத் தொண்டர் ஆசிரியர்களாகப் பணி புரிந்தவர்களுக்கு கூட இலங்கை அரசு நிரந்தர நியமனத்தை வழங்கியுள்ளது.

நாங்கள் பட்டதாரிகள் பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பினை முடித்தவர்கள். ஐந்து வருடங்களாக ஆசிரியர் சேவையினை மேற்கொண்டு பயிற்சிகள் பெற்றுள்ள போதிலும் எங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது .

நாங்கள் அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் அல்லர். எங்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனங்களை வழங்கக் கோரியே இன்றைய தினம் மன்னார் மற்றும் மடு வலயத்தில் இணைக்கப்பட்டுள்ள ஆசிரிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகிய நாங்கள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கிறோம். – என்றனர்.

இந்த கவனயிர்ப்பு போராட்டத்தில் அவர்கள் தங்கள் கையில் ஏந்தியிருந்த பதாதைகளில் “ஐந்து வருடங்களாக பாடசாலைகளில் ஆசிரியர் பணி அனுபவம். ஆனால் பணி நிரந்திரத்திற்கு போட்டிப் பரீட்சையா?“, “நாங்கள் ஆசிரியர்களா அல்லது அபிவிருத்தி உத்தியோகத்தர்களா?“, “ஆசிரியர் பற்றாக் குறைகளுக்கு எங்களைப் பயன்படுத்துவது, நியமனத்தின்போது அநீதி இழைப்பதா?“ என்ற வாசகங்கள் காணப்பட்டன.

நூற்றுக்கு மேற்பட்ட இவர்கள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

ஆசிரிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இந்தக் கவன ஈர்ப்புப் போராட்டமானது தேசிய ரீதியாக நாடு முழுவதிலும் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



















# முன்னாள் அரச தரப்பு பிரதேச சபை உறுப்பினருக்கும் போதைப்பொருள் நடவடிக்கைகளில் நேரடி சம்பந்தம்

## வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் தெரிவிப்பு

**(கி.வசந்தன்)**

கடந்தகால அரசாங்கத்தின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருக்கும் போதைப் பொருள் வியாபாரத்துடன் தொடர்பு என தெரியவருகின்றது என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று தேசிய மக்கள் சக்தியின் வவுனியா மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் தெரிவிக்கையில் –

எங்களுடைய அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முக்கியமான மூன்று முடிவுகளை ஐந்து வருடங்களுக்குள் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானித்திருந்தோம். வறுமை ஒழிப்பு, டிஜிட்டல் சிறிலங்கா மற்றும் கிளீன் சிறிலங்கா ஆகியவையே அவை. குறிப்பாக கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் வெறுமனவே சூழலை மட்டும் சுத்தப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் சமூகத்திலே காணப்படுகின்ற இளவயது மதுபாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை, விற்பனை போன்றவற்றை இவ் ஐந்து வருடத்தில் முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கையினை முனனெடுத்துள்ளோம்.

அந்தவகையிலே எங்களது செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் தப்பிச்சென்ற குற்றவாளிகளை சர்வதேச பொலிஸார் மற்றும் வெளிநாடுகளின் உதவியுடன் கைது செய்து



எமது நாட்டிற்கு கொண்டுவந்து விசாரணை செய்ததன் மூலமாக போதைப் பொருள் உற்பத்தி நிலையங்களை கண்டுபிடித்துள்ளோம்.

இவ்வாறான சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்களிற்கு எதிராக சட்டத்துக் குட்பட்டு, நீதியான நடவடிக்கையெள மேற்கொள்வதற்கு பொலிஸார் மற்றும் புலனாய்வு துறையினருக்கு பூரண சுதந்திரத்தை வழங்கியதன் மூலமாக இவ்வாறானவர்களை தொடர்ச்சியாக கைதுசெய்து வருகின்றோம்.

மேலும் குறித்த போதைப்பொருள் தொடர்பான ஆரம்ப கட்ட விசாரணையின் போது அரசியல்வாதிகளும், கடந்த காலத்திலே ஆட்சிபுரிந்த அரசியல்வாதிகளும் இவ்விடயங்களில் சம்பந்தப்பட்டுள்ளனர் என்ற தகவல்கள் வருகின்றன. இதேவேளை கடந்த கால அரசாங்கத்தினுடைய முன்னாள் பிரதேசசபை உறுப்பினரும் தொடர்புபட்டார் என அறிய முடிகின்றது.

அந்தவகையில் கடந்த காலங்களிலே போதைப்பொருள் பாவனை இந்த நாடு முழுவதும் வியாபித்து இருந்தது மட்டுமல்லாது அரசாங்கத்தினுடைய அனுசரணையுடனோ அல்லது குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளினுடைய ஒத்துழைப் போடோ நடந்திருப்பதற்கான வாய்ப்பிருக்கின்றது என்பதற்கான சான்றுகளும் வெளிவருகின்றன. போதைப்பொருள் வர்த்தகமானது இலங்கை முழுவதும் வியாபித்திருந்தது என்பதுடன் இச்செயற்பாட்டில் ஈடுபட்டவர்கள் சுதந்திரமாக நடமாடும் நிலையும் காணப்பட்டிருந்தது.

இதேவேளை இளைஞர், யுவதிகள் தங்கள் வாழ்க்கையைத் தொலைத்தமையுடன், எதிர்காலத்தை இழக்கும் நிலைக்கு இந்தப் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி இருந்தனர். குறிப்பாக வடக்கு – கிழக்குப் பகுதிகளில் இது கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இது எதிர்கால சந்ததியினருக்கும், எதிர்கால இலங்கைக்கும் இருள் மயமான சூழலை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் எமது அரசாங்கம் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. அந்தவகையிலே இதில் யார் ஈடுபட்டிருந்தாலும் – அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி, அது யாராக இருந்தாலும் சரி, நாங்கள் கவலைப்படப்போவதில்லை என்பதோடு சரியான விசாரணை மற்றும் சாட்சியங்களோடு நிரூபிக்கப்படுபவர்களை நிச்சயமாக சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களிற்கான தண்டனையை வழங்கி வைப்போம். – எனத் தெரிவித்தார்.







# சர்வதேச துடுப்பாட்ட மைதானம் மண்டைதீவில் சாத்தியமாகுமா?

● ந.லோகதயாளன்

*(நேற்றைய தொடர்ச்சி)*

பகுதி 03

மண்டைதீவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலம் 1960 ஆம் ஆண்டு வரைபடத்தின் பிரகாரம் 103 ஏக்கராகக் காணப்பட்டது.

இருந்தபோதும், சர்வதேச துடுப்பாட்ட மைதான அமைப்புத் தொடர்பில் நல்லாட்சிக் காலத்தில் பிரஸ் தாபிக்கப்பட்ட சமயம் மாகாண காணி அமைச்சராகவும் இருந்த அப்போதைய முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனிடம், இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவரும் அப்போதைய பிரதி சபாநாயகருமான திலங்க சுமதிபால விடுத்த கோரிக்கையின் பெயரில் துடுப்பாட்ட மைதானத்திற்காக இந்த இடத்தில் நிலம் வழங்க நேரில் கள விஜயம் மேற்கொண்டு நில அளவைக்கு உத்தரவிடப்பட்டு மீண்டும் அளவீடு செய்யப்பட்டது.

2016-2017 காலப்பகுதியில் மேற்கொண்ட அந்த அளவீட்டின்போது அங்கே 98 ஏக்கர் நிலம் காணப்பட்டது. இதில் இருந்து 50 ஏக்கரை சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைப்பதற்கு வழங்க கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டது. இதன்பின்னரான ஏற்பாட்டுப் பணிகளின்போதே இப் பணியும் தடைப்பட்டது.

தற்போது மீண்டும் இவ் விடயத்தைத் தூசி தட்டும்போது பல தீராத தலையிடியும் சேர்ந்தே வந்தன. அதாவது விளையாட்டு மைதானத்திற்கு மட்டும் 50 ஏக்கர் வழங்கினால் போதாது விடுதிகள், உணவகங்கள், வாகன தரிப்பிடங்கள் உள்ளிட்ட ஏனைய பயன்பாட்டிற்காக இந்த 50 ஏக்கர் நிலத்திற்கு மேலதிகமாக 80 ஏக்கர் நிலம் வேண்டும் என துடுப்பாட்ட சபை மாகாண காணி ஆணையாளரிடம் எழுத்தில் கோரி நின்றது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 2017 வரைபடம் 98 ஏக்கரில், துடுப்பாட்ட மைதானத்திற்கு வழங்க இணக்கம் காணப்பட்ட 49 ஏக்கர் நிலத்தின் எஞ்சிய பகுதி அப்பம் பங்கிட்ட கதையாகிவிட்டது.

இப் பகுதியில் ஓர் அமைச்சர் இரகசிய குடியேற்றத்திற்கு முயற்சித்த சமயம் எஸ்.பி.சாமி முதலீட்டிற்காக 15 ஏக்கர் நிலம் கோரியபோது அது வழங்கப்பட்டு விட்டது. இதேபோன்று வேலணைப் பிரதேச சபையின் பயன்பாட்டிற்காக 10 ஏக்கர் நிலம் வழங்க சிபார்சு செய்யப்பட்டு அது அங்கீகாரத்தில் நிற்கின்றது. இதனைவிட எதிர்கால அபிவிருத்திக்கு என 10 ஏக்கரும் ஒதுக்கப்பட்டுவிட்டது.

இந்த 3 நிலமும்போனால் அங்கே மிகுதி 15 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளது.

துடுப்பாட்ட சபையோ மொத்தமாக 130 ஏக்கர் கோருவதனால் எதிர்கால அபிவிருத்திக்கு என ஒதுக்கப்பட்ட 10 ஏக்கரையும் வேலணைப் பிரதேச சபைக்கு என ஒதுக்கிய 10 ஏக்கரையும் மீண்டும் சுவீகரிக்க முயற்சிக்கப்படுகின்றது.

இந்த நிலங்களுடன் அருகிலே தற்போது மேலும் 30 ஏக்கர் வரையான அரச நிலம் இருப்பதனால் அந்த 30 ஏக்கரையும் இணைத்து துடுப்பாட்ட சபைக்கு வழங்க ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இங்கேயும் ஒரு பெரிய சிக்கல் உள்ளது. அதாவது அருகிலே உள்ள 30 ஏக்கர் அரச நிலமாக பதிவுகள் காணப்பட்டாலும் அப் பகுதியில் மாங்கோஸ் தாவரம் அதிகமாக உள்ளதனால் அப் பகுதி வனவளத் திணைக் களத்தின் ஆளுகைக்கு உட்பட்டது என வனவளத் திணைக்களம் வர்த்தமானி அறிவித்தலை பிரசுரித் துள்ளது.

எனவே அப்பகுதியை சுவீகரிக்க வனவளத் திணைக்களம் தனது வர்த்தமானியை இரத்துச் செய்து பிறிதொரு வர்த்தமானியை வெளியிட வேண்டும். இருந்தபோதும் முதலீட்டாளர் சாமி மட்டும் தப்பி விட்டார். ஏனெனில் அவர் அரசிற்கான குத்தகை செலுத்துகின்றார்.

வேலணைப் பிரதேச சபை குடாநாட்டில் மிக வருமானம் குறைந்த சில சபைகளில் ஒன்று. இதனால் அவர்களின் பாவனைக்கு ஒதுக்கிய நிலத்தை மீளவும் கையளிப்பதும் சபையின் தீர்மானத்தைப் பொறுத்தே அமையும்.

**(தொடரும்)**



# இன்றைய ராசி பலன்கள் -09.09.2025




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கும், உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கும் சாதகமான நாள். உங்கள் செயல்களை இன்று தன்னம்பிக்கையுடன் ஆற்றுவீர்கள்.

உங்களின் தனிப்பட்ட திறமைகள் காரணமாக உங்கள் செயல்திறன் எடுத்துக்காட்டாக அமையும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறையை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல பிணைப்பு வளரும்.

கையில் உபரிப் பணம் காணப்படும். எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது. நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று சுமூகமான பலன்கள் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை ஏற்படுத்தும். உற்சாகமான வாய்ப்புகள் உங்கள் ஆர்வத்தை மேம்படுத்தும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். உங்கள் செயல் திறனுக்கு சிறந்த அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அபரிமிதமாக இருக்கும். நிதி வளர்ச்சி உற்சாகமளிக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் ஆரோக்கியத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்று முன்னேற்றமான பலன்கள் காண சாதகமற்ற நாளாக இருக்கும். நீங்கள் உங்களை உற்சாகமாக வைத்துக் கொள்ள வேண்டும். உங்களைச் சுற்றியுள்ளவர்களை மகிழச் செய்ய வேண்டும். சூழ் நிலையை அனுசரித்துப் போவதன் மூலம் லேசான உணர்வு காணப்படும். பிரார்த்தனை மேகொள்வதன் மூலம் நன்மை காணலாம்.

அதிக பணிகள் காரணமாக திருப்தியான நிலை காண்பது கடினமாக இருக்கும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில பிரச்சினைகள் காணப்படும்.பணிகள் அதிகமாக காணப்படும். ஓய்வுக்கு நேரம் இருக்காது.

உங்கள் மனதில் எதிர்மறை எண்ணம் காணப்படும். இது உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். அது உங்களுக்கு சாதகமாக இருக்காது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




நீங்கள் உங்கள் எதிர்காலத்தைப் பற்றி கனவு காண்பீர்கள் மற்றும் சிந்திப்பீர்கள். ஆனால் இன்று நீங்கள் சில முக்கிய நோக்கங்களைக் கொண்டிருப்பீர்கள்.

உங்கள் பணியில் மகிழ்ச்சி நிறைந்த ஆதாயம் காத்துக்கொண்டிருக்கின்றது. உங்களுக்கு கிடைக்கப்பெறும் அங்கீகாரத்தில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் எண்ணங்களையும் கருத்துக்களையும் உங்கள் துணையுடன்பகிர்ந்து கொள்வதற்கு இது ஒரு சாதகமான நாள்.உங்களின் சமநிலையான அணுகுமுறை மூலம் இது சாத்தியம்.

இன்று உங்களுக்கு பணம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பணம் உங்களிடம் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.உங்களை திடமாக வைத்துக்கொள்வதற்கான வலிமை உங்களிடம் காணப்படும்.




இன்று உற்சாகமான நாள். இன்று நிறைய வாய்ப்புகள் காணப்படும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் முடிவெடுக்கும் திறமை அபாரமாக இருக்கும்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். நீங்கள் பணிகளை எளிதாக முடிப்பீர்கள். கூடுதல் பண வரவு காணும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் தரமான நேரத்தை பகிர்ந்து மகிழ்வீர்கள்.

உங்கள் கையிலுருக்கும் பணம் போதுமானதாக இருக்கும். நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும்.

மன உறுதி காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள். இன்று தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




மனஅழுத்தம் காரணமாக சில சௌகரியங்களை இழப்பீர்கள். மகிழ்ச்சியுடன்இருக்க பாடல்களைக் கேளுங்கள் அல்லது திரைப்படங்களை பாருங்கள்.

வேலைகள் பெருகிக் காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு அதற்கேற்றவாறு ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையினை சரியான முறையில் அணுகி விஷயங்களை சாதாரணமாக எடுத்துக் கொண்டால் சோர்வு மற்றும் அமைதியின்றி இருப்பதற்கு பதிலாக மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்று தேவையான பணம் பெறுவதில் சிக்கல்கள் காணப்படுகின்றது. பணத்தைப் பொறுத்தவரை இன்று அதிர்ஷ்ட வாய்ப்பு கிடையாது.

தலைவலிக்கான வாய்ப்பு உள்ளது. உங்களை ரிலாக்ஸாக வைத்துக்கொள்ளுங்கள்.




நீங்கள் பொறுமையுடனும் உறுதியுடனும் செயல்பட வேண்டும்.விரைவான அணுகுமுறையை தவிர்க்க வேண்டும். வளர்ச்சியை நோக்கி உங்கள் இலக்குகளை அமைத்துக் கொள்ளும் யுக்தியை மேற்கொள்வது அவசியம்.

பணிகள் அதிகமாகவும் சவால்கள் நிறைந்தும் காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பின்மை காரணமாக சில சமயங்களில் நீங்கள் உணர்ச்சி வசப்படலாம்.

உங்கள் துணையிடம் குழப்பமான மனநிலையை வெளிப்படுத்துவீர்கள். இது சிறந்ததல்ல. நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். இல்லையெனில் ஏமாற்றம் ஏற்படும்.

நிதி நிலைமை இன்று சீராக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலை ஏற்படுத்தும்.




இன்று பதற்றம் காணப்படும். சில அசௌகரியங்கள் காணப்படும். இன்று பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம். அமைதியின்மை உணர்வை தவிர்த்து அமைதியாக இருக்க வேண்டும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். பணிகளை கூடுதல் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டு. பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிக்க இயலாது.

உங்கள் துணையுடன் நீங்கள் மென்மையாகவும் அன்பாகவும் உணர்வுகளை பகிர்ந்து கொள்ள இயலாது. என்றாலும் இன்று நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

நீங்கள் தொடை வலியால் அவதிப்பட நேரலாம். உடற் பயிற்சி மேற்கொள்வதன் மூலம் நிவாரணம் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் -09.09.2025




இன்று நன்மை விளையும் நாள். திருப்தி காணப்படும் நாள். உங்கள் முயற்சியின் மூலம் வெற்றி காணும் நாள். பயணங்கள் மூலம் ஆதாயம் கிட்டும் நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல் திறனுக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்களின் தனித்த திறமை மூலம் அவர்களின் ஆதரவும் அங்கீகாரமும் கிடைக்கப்பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் மகிழ்ச்சியான நிகழ்ச்சிகள் நடைபெறலாம். விருந்தினர்களின் வருகையால் இருவரும் அவர்கள் தேவைகளை பூர்த்தி செய்வதில் மும்மரமாக இருப்பீர்கள்.

பண வரவு அதிகமாக இருக்கும். பணத்தை சேமிக்கும் அளவிற்கு பாதுகாப்பு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். கடவுள் அருளலால் சிறந்த ஆரோக்கியத்தைப் பராமரிப்பீர்கள்.




உங்கள் செயல்களில் கவனம் தேவை. உங்களை குழப்பும் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்கவும். உங்கள் நெருங்கியவர்களிடம் பேசும் போது வார்த்தைகளில் கவனம் தேவை.

நீங்கள் உங்கள் பணியில் தவறுகளை செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் பணிகளை கவனமுடன் மேற்கொள்வது நல்லது.

உங்கள் துணையுடன் வாக்குவதங்கள் செய்வீர்கள். உறவில் நல்லிணக்கம் காண இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

இன்று கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. மனக் குழப்பங்களால் இன்று உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். விளைவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்க நீங்கள் அனுசரணையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் திறமையை மேம்படுத்த நீங்கள் சிறந்த கவனத்துடன் பணியாற்ற வேண்டும். திட்டமிடுவதன் மூலம் விரும்பிய பலன்களை அடையலாம்.

உங்கள் துணையிடம் அதிருப்தி மற்றும் அசௌகரியம் உணர்வீர்கள். உங்களின் வேறுபாடான அணுகுமுறை உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் காணப்படாது. நீங்கள் பணப் பரிவர்த்தனைக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. ஆரோக்கியம் சிறப்பாக இருக்க தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்று உங்கள் வளர்ச்சிப் பாதையில் தடைகள் காணப்படும். என்றாலும் அர்ப்பணிப்பு மற்றும் பொறுப்பான அணுகுமுறை மூலம் சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெறலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. விரும்பத்தகாத சூழ்நிலை ஏற்படும் என்பதால் பயணத்தின் போது கவனமாக இருக்க வேண்டும்.

அமைதியாகவும் சுமூகமாகவும் இருப்பதன் மூலம் உறவில் நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள முடியும். உங்கள் மன நிலையில் மாற்றம் வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். நீங்கள் உங்கள் சம்பாத்தியத்தை அனுபவிக்கும் நிலையில் இருக்க மாட்டீர்கள்.

இன்று பதற்றமாக காணப்படுவீர்கள். அதிக பதற்றத்தைத் தவிர்ப்பது நல்லது.

# ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி குறித்த உண்மைகளை தெளிவுபடுத்த வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

ஐஸ் ரக போதைப்பொருள் உற்பத்திக்கான இரண்டு மூலப்பொருள்கள் கொண்ட கொள்கலன்கள் கண்டுபிடிக்கப்பட்டமை போதைப்பொருள் பரவலை அடக்கும் செயல்பாட்டில் ஒரு முன்னேற்றம் என்றும், இதனுடன் கேள்விக்குரிய உண்மைகளையும் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மன்றத்துடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இதனை தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், 2 கொள்கலன்கள் துறைமுகத்திலிருந்து எவ்வாறு வெளியே வந்தன என்பதும் கேள்விக்குரியதாகும் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன், சர்வதேச புலனாய்வு அமைப்புகள் தொடர்ந்து போதைப்பொருள் மற்றும் நம் நாட்டில் போதைப்பொருள் பரவல் பற்றிய தகவல்களை வழங்கி வருகின்றன மேலும் இந்த 2 கொள்கலன்கள் குறித்து சர்வதேச புலனாய்வு அமைப்புகள் அறியப்படுத்தியிருந்தனவா என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தத் தகவல் எந்த திகதியில் பெறப்பட்டது, அந்தத் தகவல் தொடர்பான விசாரணைகளை யார் நடத்தியது, அந்த விசாரணைகள் நடத்தப்பட்ட நேரம் மற்றும் இந்த விசாரணைகளுக்குப் பின்னர் போதைப்பொருள்களுக்கான மூலப்பொருள்கள் கொண்ட இந்த இரண்டு கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டனவா என்பதை அறிந்து கொள்வது அவசியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்.

இந்த கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டால், விடுவிக்கும் செயல்பாட்டில் ஈடுபட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் பற்றிய உண்மையை வெளிக்கொணர வேண்டும் என்றும் அது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

அத்துடன், சமீபத்தில் சோதனை இல்லாமல் விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்களில் இதுவும் ஒன்றா என்பதையும் அறிந்து கொள்வது அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

இந்த போதைப்பொருள் மூலப்பொருள்கள் கொண்ட கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டது குறித்த அனைத்து தகவல்களும் நாட்டிற்கு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும், இந்த போதைப்பொருள் கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டது தொடர்பான கேள்விக்குரிய தகவல்கள் குறித்த உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.